# வாசல் திறந்தது...!

M.சேவியர் சந்திரகுமார்



கேளம்பாக்கம் இறை இரக்க ஆண்டவர் ஆலயம்

சென்னையை அடுத்த கேளம்பாக்கத்தில் தான் அந்த சம்பவம் நடைபெற்றது.

கேளம்பாக்கத்தில் அமைந்துள்ள அகில உலகப் பிரசித்தி பெற்ற இறை இரக்க ஆண்டவரின் ஆலயத்தில் மாலை நேரத்திதல் ஜெபிக்கச் சென்ற எனக்கு நேர்ந்த அவமானத்தாள் இங்கு பேசப்படும் பொருளாகிறது.

அவமானப்படுவதெல்லாம், அந்த அளவுக்கான பிரச்சினையா என்பது இக்கட்டுரையின் இறுதியில் உங்களுக்கே புரியும்!

இந்த அவமானம் ஏன், எதற்கு யாரால், என்று ஆராயுமுன்பு...

கேளம்பாக்கம் இறை இரக்க ஆண்டவர் ஆலயத்தின் (Divine mercy Church ) சிறப்பை முதலில் தெரிந்து கொள்வோம்.

அதன் வடிவமைப்பு தொடங்கி, அதன் பிரம்மாண்டமும், கலை அம்சங்களுடன் இரவிலே மின்னலாய் ஜொலிக்கின்ற தோற்றமும், எல்லாவற்றுக்கும் மேலாக, புனித பாஸ்டினாவுக்கு இயேசு காட்சி அளித்து தனது

> 2006 ஆம் ஆண்டில் இறைவன் இயேசு எனக்குக் கொடுத்த தரிசனத்தில் கூறிய முன்னறிவிப்புகளுடன், 16 வருடங்கள் கழிந்த, இந்த 2022ஆம் ஆண்டில் எனது வாழ்வில் நடந்து வருகின்ற காரியங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது, இறைவன் ஒரு செய்தியை மக்களுக்கு உணர்த்துவதற்காக இருக்குமோ என்று எனக்குத் தோன்றியதன் விளைவே இந்த கட்டுரையாகும்!
>
> –ஆசிரியர்

இரக்கத்தைப் பற்றி விவரித்த, அதே இறை இரக்க ஆண்டவரின் வல்லமையுமே, இங்கு நாள்தோறும் ஏராளமான சாதி மதங்கடந்த பக்தர்களை ஈர்க்கிறது என்பதே உண்மை.

இந்த வருடத்தின் பிப்ரவரி மாதத்திலே கொரோனா அரக்கனின் பரவல் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு தளர்வுகள் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டிருந்த வேளையிலே கேளம்பாக்கமும் இதன் திறப்பு விழாவுக்கு தயாராகியது.

இந்த ஆலயத்தைப்பற்றி நான் எனது முகநூலில் 2021ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பதிவிட்டிருந்ததை தனிச்செய்தியாக இங்கு பார்க்கலாம்.

இத்தனை சிறப்புமிக்க ஆலயத்தில் எனக்கேற்பட்ட அனுபவத்தால் ஏற்பட்ட வடு கடந்த 16 வருடங்களாக ஏற்கனவே எனக்கு நேரிட்ட இக்கட்டுக்களுக்கெல்லாம் முத்தாய்ப்பாக அமைந்தது என்பதே எனது முடிவாகும்.

இதன் விபரத்தை முழுமையாக தெரிந்து கொள்வதற்கு முன்னர், அன்றொருநாள் நிகழ்ந்த இயேசுவின் காட்சி பற்றியும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும்.

வடவை மாதா குரலொலி, ஆகஸ்ட் 2008 இல் தொடங்கி அதன் பின் வெளியிடப்பட்ட ஒரு சில இதழ்களில் இறைவன் இயேசுவின் வெளிப்பாட்டைப் பற்றி தெரிவித்ததை கீழே தருகிறேன்.

இதைத் தெரிந்து கொண்டால் மட்டுமே, பின்னால் தெரிவிக்கப்படும் விஷயங்களை புரிந்து கொள்ள முடியும்!

### "இயேசுவின் காட்சி எனக்கு நடக்கப் போவதைக் காட்டியது"

2006ஆம் வருடம் ஆகஸ்டு மாதம், வடவை மாதா குரலொலியை விநியோகிக்கவும், மாதா திருவிழாவில் கலந்து கொள்ளவும், நான் வடக்கன்குளம் வந்திருந்த நேரம்!

அன்றிரவு அதாவது 16 ஆம் தேதி

## 2021 பிப்ரவரி 14 ல், இவ்வாலயம் உருவானது பற்றிய என்னுடைய முகநூல் பதிவு..

கேளம்பாக்கத்துக்கே பெருமை சேர்க்கும் ஒரு காரியம் பிப்ரவரி 13ஆம் தேதி நடந்தேறியது. கிறிஸ்தவ வேதாகமத்தில் குறிப்பிட்டிருக்கும் இயேசு வின் பன்னிரெண்டு சீடர்களின் சுருபங்கள் கோயிலுக்கு மேலேயே நிறுவப்பட்டிருக்கும், கத்தோலிக்க தேவாலயம் தமிழகத்திலேயே இதுவாகத்தானிருக்கும். ரோமாபுரி கலையழகுடன், இவ்வளவு பிரம் மாண்டமான கோவில், நிச்சயமாக தமிழக பக்தர்களை கேளம்பாக்கத்துக்கு அதிக அளவில் ஈர்க்கும் என்பதில் சந்தேகமில்லை.

முன்பக்கம் மாத்திரமல்ல, கோவிலின் நான்கு புறங்களிலும், அவ்வளவு நுட்பமான சிற்ப கலையழகு.!!

இரவு நேரங்களில் கோயில் முழுவதுமே தங்கமாக மின்னுகிறது.!!

வெளியிலேயே இப்படியென்றால், உட்பக்கத்தின் அமைப்புக்கள் எப்படி யிருக்கும் என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டுமா.?

மனதளவிலும் உடலளவிலும் நொறுங்கும். மனிதர்களுக்கு இயேசுவின் இருதயத்திலிருந்து பாயும், அளவு கடந்த இரக்கத்தை வெள்ளமென பெற்றுத் தருவதுதான், இந்த ஆலயத்தின் சிறப்பு! இந்த தேவாலயத்தின் திறப்பு விழாவுக்கு கேளம்பாக்கத்தைச் சுற்றியுள்ள எல்லா மதத்தினரும் கலந்து கொண்டது, இந்த விழாவின் சிறப்பம்சமாகும்.


கடைசியாக ஒன்று! ஒருமுறை இங்கு வந்து பாருங்கள்... இறைவனின் அருளில்லாமல் இந்த ஆலயத்தை நிச்சயமாக ஒருவர் கட்டியிருக்க முடியாது. பங்குத் தந்தையான அருட்திரு. ஸ்டீபன்தான் அவர்!

முழுக்க முழுக்க உள்ளூர் மற்றும் சுற்றுப்புற ஊர்களிலுள்ள பல மதங்களைச் சேர்ந்த பொதுமக்களின் பேருதவியுடன்...!! •

அதிகாலை 1 மணியளவில் இறைவன் இயேசுவின் காட்சியை அந்த அறையில் நான் காண நேரிட்டது. அவரது விலாவிருந்து பம்பு செட்டில் எவ்வாறு தண்ணீர்பீச்சி அடிக்கிறதோ அதே பருமனில் வேகமாக இரத்தம் பீச்சி அடிக்கப் பார்த்தேன்.

ஒரு சினிமா படம் பார்த்தது போன்று காட்சி இருந்தது

காட்சியின் அடுத்தகட்டம்



எனக்கு நடக்கப் போவதை தரிசனத்தில் பார்த்தேன். அவருக்கு முதுகைக்காட்டிய படி எதிர்திசையில் ஒரு உருவம் புழு போன்று சுருண்டு கிடந்தது அது வேறு யாருமில்லை! நான்தான்.

அடுத்தகட்டமாக, இறைவன் இயேசுவின் கை மட்டும் நீளமாக வளர்ந்து, சுருண்டு என் உருவத்தின் கைகளைப் பிடித்து என்னை மேலே தூக்கியது.!

“உலகமே உன்னைக் கைவிட்டாலும் நான் ஒருபோதும் உன்னை கைவிடவே மாட்டேன்” இயேசுவின் வாயிலிருந்து வார்த்தைகள் புறப்பட இந்த வார்த்தைகள் மிகத் தெளிவாக எனக்கு கேட்டன.

மேற்படி இயேசுவின் காட்சியில் முன்னறிவித்தபடி பல்வேறு சம்பவங்கள் நேர்ந்தன. அந்தந்த சம்பவங்கள் மூலம் முற்றிலுமாக கைவிடப்பட்டு ஒவ்வொன்றிலும் அற்புதமாக கைதூக்கப்பட்டேன்.

இவற்றைத்தான் முந்தைய இதழ்களில் விவரித்திருந்தேன்.

இனி இப்பொழுதுள்ள விஷயத்தைத் தொடர்கிறேன்.

இன்றைய தேதியிலிருந்து, சுமார் 6 மாதங்களுக்கு முன்னர், மாலை ஏழு மணி! ஜெபமாலை செய்வதற்காக கோயிலுக்குள் நுழைந்தேன். ஜெபமாலையின் பெரும்பகுதி முடியும் நேரம்!

எனக்கு அருகில் 20 அடி தொலைவில் இரண்டு குடும்பங்கள் புதிதாக திருமணமானவர்கள், மிகுந்த சப்தத்துடன் பேசியும் சிரித்துமாக இருந்தார்கள். அந்த சமயத்தில் என்னைப் போன்று ஜெபம் செய்ய வந்தவர்களுக்கு இடையூறு செய்கின்ற அளவுக்கு கூச்சல்!

பொறுத்துப் பார்த்த என்னால், மேற்கொண்டு ஜெபம் செய்ய இயலவில்லை. நேராக அவர்களிடம் சென்றேன். அதில் ஒருவர் காலுக்கு மேல் காலைப் போட்டு, அநாகரீகமான அமர்ந்திருந்தார்.

‘நீங்கள் கிறிஸ்தவரல்லாதவரா’ என்றேன். அவரது பாவனைதான் என்னை அவ்வாறு கேள்வி எழுப்பத் தூண்டியது.

ஒத்துக்கொண்டார் அவரை அழைத்து வந்த கத்தோலிக்க குடும்பம், ஆங்கில பலிபூசைக்கு ஞாயிறுகளில் வரக்கூடியவர்கள் போல தெரிந்தது! அனைவருமே 35 வயதுக்குட்பட்டவர்கள்தாம்.

அழைத்து வந்த குடும்ப உறுப்பினர்களிடம் நான் கூறினேன். “அவர்கள் இந்துக்கள், நமது முறைகளை அறியாதவர்கள், இங்கு 40 பேருக்கு மேல் ஜெபம் செய்து கொண்டிருக்கிற நேரத்தில் நீங்கள் இவ்வாறு சத்தமிடுவது சரிதானா என்றேன்.

“நீங்கள் யார்? இதைக்கேட்க” என்றார், அவர்களை அழைத்து வந்திருந்த அந்தப்பெண்!

‘நான் இந்தப் பங்கைச் சேர்ந்த ஒரு உறுப்பினர்’

‘நாங்கள் சத்தம் போடுவதை கேட்க உங்களுக்கு யார் உரிமை தந்தது? ‘வாருங்கள் பங்கு தந்தையர் இருப்பார்கள். அவர்களிடமே நியாயம் கேட்கலாம்.’

ஒரு கணம் தயங்கி, பின்னர் ஒத்துக் கொண்டேன். கோயில் முதல் தளத்தில் இருந்தபடியால் பின்புற படிகளின் வழியே இறங்கிச் சென்றோம்.

பங்குத் தந்தையும், பிற தந்தையர் அனைவருமே ஒரு மாதம் முன்னர்தான் பொறுப்பேற்று கொண்டிருந்தார்கள் அவர்கள் எனக்கும் சரியாக அறிமுகமில்லாதவர்தான்.



கேளம்பாக்கம் இறை இரக்க ஆண்டவர் ஆலயம்

முன்னாள் பங்குத் தந்தைக்குப் பதிலாக வந்தவர்களே இந்த தந்தையர்!!

கோயிலைக் கட்டுவதற்கான கட்டிடக்குழுவின் செயலாளராக, கடந்த ஒரு மாதம் முன்பு வரை பணியாற்றிய நானும் இரண்டு மூன்று பேரின் செயல்பாடுகளின் தன்மையை அறிந்து அனுபவப்பட்டு, பொறுப்பிலிருந்து என்னை விடுவித்துக்கொண்டு விட்டிருந்தேன்.

இதெல்லாம் நமக்கு சரிப்பட்டு வராது என நினைத்தே இவைகளிலிருந்து ஒதுங்கி விட்டிருந்தேன்.

ஒரு கணம் இவையெல்லாம் எனது மனத்திரையில் ஓடியது.

பங்குத் தந்தையின் இல்லத்தை நோக்கிச் சென்றோம். தூரத்தில் புதிய பங்குத் தந்தை நின்று கொண்டிருந்தார்!

மேற்கொண்டு நடந்த சம்பவங்கள் பற்றி விவரிக்கும் முன்பு கடந்த கால சில அனுபவங்களை இங்கு எடுத்துக் கூறினால்தான் சரிப்படும் என்பதால் அதனை கீழே தெரிவிக்கிறேன்.

நான் எனது செயலாளர் பொறுப்பிலிருந்து விலகுவதற்கு இந்த நபர்களது செயல் முறைகள்தான் காரணம்.

கடந்த சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாக நாங்கள் அனைவருமே ‘கோயில் கட்டட நிதி’ நன்கொடை வசூல் செய்யுமுகமாக எனது காரில் செல்வதை வழக்கமாக கொண்டிருந்தோம். ஜாதி, மதம் பாராது, சம்பந்தமே இல்லாதவர்கள் கூட லட்சக்கணக்கில் பங்குத் தந்தையின் கடின உழைப்பின் மூலம் நன்கொடைகள் கொடுத்த படியால், கட்டடம் வேகமாக வளர்ந்தது.

பங்கைச் சேர்ந்த உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள், ஆயிரம், லட்சம் என்று கொடுத்தார்கள்! பலர் வேலைகளின் பொறுப்புக்களை எடுத்துக் கொண்டார்கள்.

ஆனால். . .

செயலாளரான என்னால், நான் பொறுப்பேற்றுக் கொண்ட தொகையை கடைசி வரை செலுத்தவே முடியவில்லை!

ஆரம்பத்தில் கொடுத்த சுமார் 2 இலட்சத்ததோடு சரி, அதன்பின்னர் சில ஆயிரங்கள் கூட என்னால் புரட்ட முடியவில்லை.

அந்த மூவர் குழுவின் ஒரு சிலர் இதனாலேயே என்னை காதுபட அவமானப்படுத்தி கேலி செய்வதை வாடிக்கையாகவே கொண்டிருந்தார்கள்.

கோயில் கட்டடக்குழு சார்பாக நான் எழுதும் கூட்ட அறிக்கை கூட தேவையில்லாதது' என்று என்னிடமே கூற ஆரம்பித்திருந்ததும் அப்பொழுது நினைவுக்கு வந்தது.

வார இறுதி நாளான ஞாயிற்றுக் கிழமையில் நடைபெறுகின்ற நான்கு பலிபூசையிலும் சராசரியாக இரண்டாயிரம் பேர் கலந்து கொள்ளும் இந்த கோவிலில் அவர்கள் வலம் வந்தார்கள்.

கோயில் திறப்பு விழாவில் தாம் மட்டுமே முன்னிலைப்படுதப்பட வேண்டும் என்ற நோக்கில் திறப்பு விழாவுக்கு 4 மாதங்களுக்கு முன்பிருந்தே என்னை ஓரங்கட்ட ஆரம்பித்தார்கள், தனது சிறிய பரிவாரங்களுடன்! வழக்கமாக என்னோடு சேர்ந்து செய்யும் நிதி வசூல் பயணங்களைக் கூட எனக்கு அழைப்பு இல்லாமல், அவர்களே செய்ய ஆரம்பித்தார்கள்.

எல்லா வகையிலும் ஓரங்கட்டினார்கள், எந்த வித முக்கிய நிகழ்ச்சிகள் பற்றியுங்கூட எனக்கு தெரிவிப்பதில்லை.

என்னை அவர்கள், ஒதுக்குகிறார்கள் என்ற விபரமே திறப்புவிழா அன்றுதான் தெரிந்து கொண்டேன்.

கோயில் என்பது தனிப்பட்டவர் சொந்தம் கொண்டாடக்கூடியதில்லை; ஜாதி பாகுபாடில்லை; அது எல்லோருக்குமே சொந்தம்! இந்த இறை சமூகத்திலே, இவர்களைப் போன்றவர்கள் அரசியல் செய்வது, அந்த ஆண்டவனுக்கே ஏற்காது என்பதாலும் இதுபோன்ற 'சாதாரண' பொது நபர்களை பெரிது படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்ற காரணத்தால் மேற்படி விவரங்களை பங்குத் தந்தை உட்பட யாரிடமும் கடைசி வரை நான் கூறவில்லை.!

எனது பொறுப்பிலிருந்து ஒதுங்கிக் கொண்டேன். செயலாளர் என்ற முறையில் என்னிடமிருந்த பதிவேடுகளும் சப்தமில்லாது ஒப்படைக்கப்பட்ட பின்னர்தான் நிம்மதியே பிறந்தது.

ஆக, இப்பொழுது, கோவிலில் நடந்த அந்தச் சம்பவத்தைத் தொடர்கிறேன்..

என்னை அழைத்துச் சென்ற அந்த பெண்ணுங்கூட இவர்களுக்குள் ஒருவரை நன்றாக தெரிந்து வைத்திருக்க வாய்ப்பு உண்டு.

இந்த பெண் நடந்ததை அவர்களிடம் கூற, சும்மா கிடந்த வாய்க்கு அவல் கிடைத்தது. வார்த்தையால் குதறி விட்டார்கள்!

உள்ளான அவர்களது மனதில் என்மேல் அதிருப்தி இருந்தாலும் கடந்த காலங்களில் நேரில் பார்க்கும் பொழுதெல்லாம் எனக்குள்ள வாய் வார்த்தை மரியாதையை கொடுத்து வந்தவர்கள்தான் இவர்கள்!

ஆனால், ஆளுக்கொரு ஈட்டி கொண்டு குத்துவது போன்று அவர்களது வார்த்தைகள் இருந்தன.

ஏற்கனவே சில நாட்களுக்கு முன்பு நடந்த 60 பேர் கொண்ட பொதுக் கமிட்டி கூட்டத்தில் இவர்களது ஓரங்கட்டும் செயல்பாடுகளைக் கூற முற்பட்ட போது, அங்கிருந்த முன்னாள் பங்குத் தந்தை, என்னை பேச விடாமல் தடுத்த செயல், இவர்களுக்கு ஒரு தெம்பையும், அசாதாரண தைரியத்தையும் கொடுத்திருந்தது, இவர்களது இப்போதைய பேச்சில் தெரிந்தது!!

'ஆங்கில பலிபூசையின் போது எத்தனை பேர், காலுக்கு மேல் கால் போடுகிறார்கள்.' பெரிதாக கேட்க வந்து விட்டீர்கள்' என்று நடக்காத வழக்கத்தை தனது வாதத்திற்கு வலு சேர்க்கும் விதமாக பேசினார்கள்.

ஆளுக்கு ஆள் என்னை வசை பாடியது, அதுவும் கோயில் வளாகத்தில் நடந்தது எனது வாழ்வில் இதுவே முதன்முறையாகும்!

என்னை அவர்கள், பேச விடவுமில்லை! பேச முயன்றாலும் அவர்களது ஆதிக்கம் அதிகமாக இருந்ததால் ஒரு கட்டத்தில், பேசுவது வரை பேசட்டும் என்று மௌனமாகவே நானிருந்தேன்.

சுமார் 45 நிமிடங்கள் கடந்தபோது அந்த பெண்ணின் கணவர் வாய் திறந்தார்.

"சார்... நீங்கள் கேட்டதில் எந்தத்





தவறுமில்லை சப்தம் செய்யாதீர்கள் என்று மட்டும் கேட்டுக் கொண்டீர்கள்” என்று அவராகவே எல்லார் மத்தியிலும் வாக்குமூலமாக கொடுத்தது எனக்கு அந்த தருணத்தில் முழு பலத்தைக் கொடுத்தது.

கையினுள்ளே மறைந்திருந்த ஜெபமாலை ஏதோ ஒன்றை உணர்த்தியது.

கடந்த பல வருடங்களாக எனது கடன் பிரச்சினைக்காகவும் நான் பல்வேறு பக்தி முயற்சிகளை செய்து வந்திருக்கிறேன். ஞான காரியங்கள் ஒன்றிலும் தவறுவதில்லை.



கேளம்பாக்கம் இறை இரக்க ஆண்டவர் ஆலயம்

ஒரே நாளில் சென்னைவரையுள்ள 9 மாதா கோயில்களுக்கு சென்று ஜெபிப்பது, வாரத்தில் குறிப்பிட்ட நாட்களில் சில கோயில்களுக்குச் செல்வது, பணி நிமித்தம் எங்கு சென்றாலும் அருகிலுள்ள தேவாலயங்களுக்குச் சென்று ஜெபிப்பது என்று தொடர்ந்து செய்து வந்த நான், சம்பவம் நடந்த மாலை நேரத்தில் தொடர்ந்து தினமுமாக ஒன்பது நாட்கள் ஜெபமாலை ஜெபிப்பது என்ற நோக்கில் வந்திருந்த போதுதான் இந்த சம்பவம் நடந்தது. அன்றைய நாள், ஜெபத்தின் ஏழாவது நாள், இன்னும் இரண்டு நாளில் நவநாள் இறுதி பெறுவதாக இருந்தது.

ஆக, அந்தப் பெண்ணின் கணவர், உண்மையின் வார்த்தைச் சொன்னதும், அவர்களது கூச்சல்களுக்கு நடுவில், அங்கிருந்து நகர்ந்து ஜெபமாலையின் விடுபட்ட பாகத்தை முடிக்கும் நோக்கில் ஆலயத்துக்குச் சென்று, அனைத்தையும் மாதாவின் பாதத்தில் வைத்து விட்டு வீடு சென்றேன்.

**வீ**டு செல்லும் வழியில் எனது நினைவு பின்னோக்கி சென்றது.

**கடந்த 20 ஆண்டுகளில், பெரும் பாலான வருடங்களில் அங்குள்ள பங்கு ஆலயத்தின் ஒலி ஒளிக்கான செலவுகளை செய்து வந்திருப்பதை அனைவரும் அறிவர்.**

**நூற்றுக்கும் மேற்பட்டவர்கள், எமது நிறுவனத்தில் பணிபுரிந்த காலத் தொடங்கி இப்பொழுது வரை, எந்தவித சர்ச்சையிலும் அகப்படாத வாழ்வு என்னுடையது.**

**அப்படிப்பட்ட என்னை அவமதித்தது அவர்களது அரசியல் தனத்தின் உச்சம் என்பதை அப்பொழுது நினைத்துப் பார்த்தேன்.**

ஆனால், ‘இறைவன் வாழும் ஆலயத்தில் ஜெபம் செய்யவந்த என்னை, அதற்கு இடையூறு செய்யும் செயலை உறக்கச் சொன்ன ஒரே காரணத்துக்காகவா இவ்வளவும், வாங்கிக் கட்டிக் கொண்டேன்! என்று எனது மனது பதைபதைத்து.

ஞாயிறு தினங்களில் இந்த மூவரும் தனித்தனியாக கோவிலின் வாசலிலோ, இன்னொருவர் பீடத்திலோ மற்றுமொருவர் காணிக்கை எடுப்பதற்கோ நின்றுகொண்டிருப்பது வழக்கமாகிவிட்டிருந்தபடியால் எப்படி நான் இவர்கள் மத்தியில் கோயிலுக்குள் நுழைந்து இறைவனிடம் கேட்க முடியும் என்பதாக மனம் தவித்தது.

அதுமட்டுமல்லாது, மறுநாள் நவநாளின் எட்டாவது தினமல்லவா, எப்படி என்னால் அங்கு சென்று ஜெபிக்க முடியும்? எப்படி நவநாள் ஜெபத்தை இறைவனுக்கு உகந்ததாக்க முடியும் என்று நினைக்க அப்போதுதான்

*அந்த 'ஐடியா' எனக்குள் உதித்தது.*

கோவிலுக்கு *50* அடி தள்ளி, அதற்கு எதிரிலேயே அதே சாலையில் அமைந்துள்ளதுதான் எனது அலுவலகம்.

அந்த அலுவலகத்தில் அமைந்துள்ள குறிப்பிட்ட ஒரு கட்டடத்தின் குறிப்பிட்ட ஒரு ஜன்னலைத் திறந்தால், இறை இரக்க ஆண்டவரின் சுருபம் உட்பட, முழுக்கோயிலும் கண்களுக்குத் தெரியும்!

'உலகமே கைவிட்டாலும் நான் கைவிட மாட்டேன்' என்றாரல்லவா?

*120* பேருக்கு மேலாக வேலை செய்து வந்து இடத்தில் நான் ஒருவரே முழுநேரப் பணியாளர் என்று சுருங்கி விட்ட நிலைமையில் பல வருடங்களாக இருந்ததை நினைத்தேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், *60* பேருடன் பயிற்சி வகுப்புக்களை *10* பணியாளர்களோடு மீண்டும் ஆரம்பித்த என்னால், கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக 'மீண்டும் ஒரேயொருவன்' என்ற நிலைக்கு தள்ளப்பட்டடதையும் நினைத்துப் பார்த்தேன்.

"இப்பொழுது ஒரே ஆதரவாக இருந்த இறைவனும், அவர் ஆலயத்துக்குள் நுழைய முடியாத சூழ்நிலையை அனுமதித்து, உலகமே கைவிடும் நிலை ஆகிவிட்டதே" என்று மனங்கலங்கியது.

அப்போதுதான் ...

அந்த அற்புதம் நடந்தது!!

பிரம்மாண்டமான கோயிலினுள்ளே, ஒரு தூணையாவது எனது செலவில் கட்டிக் கொடுக்க வேண்டுமே என்று எத்தனையோ முறை உபவாசத்துடன் ஜெபித்துங்கூட ஒன்றுமே வாய்க்கவில்லை!

ஆனால், இப்பொழுது பழைய கல்யாணத்துக்கு மொய் எழுதுவது போல, புதிதாக வந்த பங்குத் தந்தையரைப் பார்க்கச்சென்று, இறையருளால் எனக்கு கிடைத்த திடீர் வரவை, இரண்டு தவணையாக பங்குத் தந்தையிடம் கொடுக்கச் சென்றேன்.

ஒரே வாரத்தில் பதினாறு வருடங்களாக அடைப்பட்டிருந்த பணப் பிரச்சினைக் கதவுகள் ஒவ்வொன்றாகத் திறக்க ஆரம்பித்தன.

என்னை கோயிலுக்குள்ளேயே நுழைய விடாத சில மனிதர்கள் மத்தியில் எனக்கு திறந்தவாசலைத் தந்தார். ராஜமாளிகையில் அமைவது போன்று மூன்று பிரதான கேட் வாசல்கள் அதனைத் தாங்கும் பிரம்மாண்ட தளமும் சுவருமாக, அனைவரும் நுழையும் வாசலை, என் மூலம் கட்டச் செய்தார், இறை இரக்க ஆண்டவரான இயேசு!!

உலகமே கைவிட்டாலும் நான் உன்னைக் கைவிட மாட்டேன் என்று எனக்கு கொடுத்த வாக்குத் தந்தத்தை, அவரது ஆலயத்தின் மூலமேயே நிறைவேற்றியதோடு, ஏசாயா *22:22*, மற்றும் வெளிப்படுத்துதல் ஆகமம், *3:8* ன்படி



இயேசு ஆண்டவர், நான் கேளம்பாக்கத்திற்கு வந்த காலந் தொட்டு இன்று வரை வசனங்கள் மூலமும், வெளிப்பாடு மூலமும்தான் ஒவ்வொரு செயல்களையும் நடைபெறச் செய்தார். யாருக்கும் தெரியாத உண்மைகளான இவற்றை, தக்க சான்றுகளோடு தொடர்ந்து வரும் பக்கங்களில் இறைவன் உணர்த்தியதால் வெளியிடுகிறேன்

– –ஆசிரியர்

திறந்த வாசலைத் தந்தார்.

**"நான் உங்களுக்குத் தந்த திறந்த வாசலை ஒருவனாலும் மூட முடியாது"**

*(வெளி. ஆகமம், 3:8)*

இதே போன்ற சம்பவம் எனது பிறந்த ஊரான வடக்கன்குளத்திலும் நடந்தது! வடக்கன் குளத்துக்கு இரண்டே இரண்டு பெருமைகளே உள்ளன. ஒன்று மாதாவின் சுருபம் தனது கரங்களை விரித்து கண்ணீர் விட்ட சம்பவம்! இடுத்தது, சமீபத்தில் புனிதராக உயர்த்தப்பட்ட புனித தேவசகாயத்துக்கு, வடக்கன்குளத்தில் தான் ஞானஸ்நானம் கொடுத்த காரணம் கருதி, வடக்கன்குளம் பெருமையடைந்த சம்பவம்..

2012ல். அப்போதிருந்த பங்குத்தந்தை மாதா காட்சி கொடுத்த சிற்றாலயம், ஓட்டை விரிசல் ஏற்பட்டு ஒழுகி மொத்த கட்டடமும் சிதிலமடைந்து வருவதால், அதனை சரி செய்யவும், வடக்கன்குளம் வரலாற்றை பிரதிபலிக்கும் பல வண்ண தரமான ஓவியங்களை வரைந்து சுவற்றில் பதிய வைக்கவும், அப்போதுள்ள காலத்தில் முத்திப்பேறு பெற்ற தேவசகாயத்துக்கு, அதே கோவிலில் மணி மண்டபம் ஏற்பாடு செய்யவுமான மூன்று காரியங்களுக்கு ஒரு பெருந்தொகை தேவைப்படுவதாக தெரிவிக்கவே, நிதி நிலைமை படுமோசமாக இருந்தும், மூன்று தவணைகளாக கொடுத்ததையும் எனது அந்த கால கட்டத்திலும், அதனைச் செய்ய இறைவன் அருள் செய்ததையும் இப்போது நினைத்துப் பார்க்கிறேன். இதன் திறப்பு விழாவுக்கு சுமார் 100 பங்குத்தந்தையர்கள் கலந்து கொண்டாலும் எனது மேற்படி இந்த பங்கேற்பு அன்றிலிருந்து இன்று வரை மறைத்தே வைத்திருந்தது ஏனென்று இன்றும் தெரியவில்லை!

மேற்படி, இரண்டு ஊர்களிலும் நடந்த இது போன்ற செயல்கள், ஒவ்வொரு பங்குத்தளத்திலும் நடக்க வாய்ப்புண்டு. ஒன்றில், அது பங்கு சேர்ந்த இயக்கத்தின் நிர்வாகப் பொறுப்புகளை பெற்றுக் கொண்டு இறைவனுக்குச் சித்தமான காரியங்களல்லாத விஷயங்களை செய்து, தனது செல்வாக்கை உணர்த்தும் அரசியல் நாடகத்தை நடத்துவதாக ஆகட்டும், அல்லது பங்குத் தந்தையே கூட, கொடுப்பவர்களைப் புறந்தள்ளிவிட்டு, தான் தான் செய்தேன் என்று என்று பங்குத்தளத்திலும் மேற்றிராசனத்திலும் தன்னை மட்டுமே உயர்த்தும் செயலும் ஆங்காங்கே நடக்கத் தான் செய்கிறது.

ஜெப சிந்தனையோடு இந்த கருத்தை வைக்கிறேன்.

இந்த கட்டுரையை எழுத குறைந்த பட்சம் 10 நாட்கள் இறை சமூகத்தில் காத்திருந்தேன். இறைவனது அனுமதியுடன், இறைவனது சமூகத்தின் முன், தகுதியே இல்லாத நான் இதனை எழுத இறைவன் தூண்டியதன் விளைவே இக்கட்டுரையே தவிர, எனது சொந்த செல்வாக்குக்காகவோ வேறு எதற்காகவோ இல்லை. சொந்த செல்வாக்கை உயர்த்த விரும்புபவர்கள், ஒருபோதும் தனது பிரச்சனைகளை வெளிப்படையாகக் கூறவே மாட்டார்கள் ஆனால் நான் என்னை தாழ்த்தி இறைவனை உயர்த்த எடுக்கும் இந்த முயற்சியில், குறிப்பாக இதில் எழுதப்படும் ஒவ்வொரு எழுத்துங்கூட, இறை நாமத்தை உயர்த்துவதற்காக மட்டுமேயன்றி தனிப்பட்ட யாருடைய பெருமையையும் குறைத்து மதிப்பிடுவதற்காக, நிச்சயமாக இல்லை இறைவனின் காட்சியின் மூலமும் அதனை வெளிக் கொணர்ந்த இந்த கட்டுரை மூலமும் கீழ்கண்ட ஒன்றை இறைவன் உணர்த்துவதாக நான் உணர்கிறேன்:

**'பங்குத் தந்தையரோ பங்கு நிர்வாகிகளோ ஒருபோதும் இறைப் பணி சார்ந்த நிகழ்ச்சிகளை அரசியலாக்க முயற்சிக்காதீர்கள்' – (முற்றும்)**





வடவைமாதா குரலொலி ஆசிரியர்சேவியர் சந்திரகுமாருக்கு MSFSயின் அகில உலகத் தலைவர் அருட்திரு அஃப்ரகாம் வெட்டுவேலில் முன்னிலையில்அதன் துணைத் தலைவர் நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்த போது எடுத்தபடம் அருகில், கேளம்பாக்கம் பங்குத் தந்தை ஜெயசீலன் நிர்வாகத் தந்தை அருட்திரு. லூக்காஸ்

முந்தைய கட்டுரையின் பிற்சேர்க்கை....

## "இயேசு ஆண்டவர், நான் கேளம்பாக்கத்திற்கு வந்த காலந் தொட்டு இன்று வரை வசனங்கள் மூலமும், வெளிப்பாடு மூலமும்தான் ஒவ்வொரு செயல்களையும் நடைபெறச் செய்தார்" சான்றுகள் கீழே.... ஆசிரியர்



கடைசி கால இன்றைய உலகில், தினமும் வாழ வழி நடத்தப்படுவதே அதிசயம்தான்.

ஆனால், இது நிச்சயம் இறைவனால் தான் நடைபெற்றது, விஞ்ஞான உலகுக்கே, ஏன் என்று தெரியாத அளவுக்கு உள்ளது என்று சுத்த மனதுடன் ஒப்புக்கொள்ள வைக்கும் சின்ன நிகழ்வுகள் கூட அதிசயம் தான்!

எனது வாழ்வில் நடந்த சில அதியங்களில் தொகுப்பு இதோ!

1. கேளம்பாக்கம் பற்றி ஒரு சிறிதும் அறியாது, சென்னையில் தங்கிருந்த நான், கேளம்பாக்கத்தை எனது வாழ்விடமாக தேர்ந்தெடுத்ததே அதிசயம்தான்! கேளம்பாக்கத்திலுள்ள ஒருவர் கூட தெரியாத நிலையில், நானாகவே மனதில் நினைத்து பஸ் ஏறி கேளம்பாக்கத்தில் இறங்கினேன். எடுத்த எல்லா முயற்சிகளும் தோல்வியுற, கேளம்பாக்கத்திலிருந்து பெசன்ட் நகர் மாதா கோயில், பின்னர் அங்கிருந்து மகாபலிபுரம் வரை ஜெபமாலை ஜெபித்த நிலையில் நடந்து செல்ல, மகாபலிபுர எல்லையில் மயங்கி விழுந்தது இப்பொழுதும் நினைவுக்கு வருகிறது. நினைவு தெளிந்த பின், பஸ் ஏறி நாகை வேளாங்கண்ணி ஆலயம் சென்று பிரார்த்தனை செய்தேன். கிராம மக்களுக்காக வளர்ச்சி பணிகள் செய்வதற்கான நிதியை பெற்று அதனை குறிப்பிடப்பட்ட திட்டங்களின் மூலம் செயல் படுத்த வேண்டும் என்பதே எனது நோக்கம் அதற்கான அனைத்து செயல்களும் கச்சிதமாக முடிந்தாலும், இம்முயற்சிகளுக்கு உதவி செய்வேன் என்று உறுதி செய்த ஒரு சில 'பெரியவர்கள்' கூட எனக்கு எதிராக திரை மறைவில் காய் நகர்த்தி நான் எனது இலக்கை அடைய முடியாத படி செய்ததும் நினைவுக்கு வருகிறது. தோல்வி தொடர்ந்த நிலையில், இறைவனே துணை என்றிருந்த எனக்கு ஒரு கனவு தோன்றியது. மாதா சப்பரப்பவனியுடன் நான் வசித்த தெரு வழியாக வலம் வருவதாக கனவு!

ஒரே மாதத்தில் எனக்கு பரிந்துரை செய்ய மறுத்த சென்னை இயக்குனரை மீறி டெல்லி நிறுவனம் அற்புத விதமாக முதல் திட்ட ஒப்புதலுடன் முதல் தவணையும் அனுப்பி, காலுன்றியது எனது முதல் முயற்சி. மாதா மூலம் நடைபெற்ற முதல் அதிசயம்.

2. இந்த நிதி வருவதற்கு இரு வருடங்களுக்கு முன்பே, கேளம்பாக்கத்தில் தங்கிருந்த அந்த கால கட்டத்தில், சென்னை வாழ் டுமிங்குப்பத்தைச் சேர்ந்த சேரி வாழ் மனிதரை, அவரது ஷயரோக (TB) வியாதியைக் குணப்படுத்த வேண்டி, நானே ஒரு ஆட்டோவில் ஏற்றி, தாம்பரம் சானிட்டோரிய ஆஸ்பத்திரியில் சேர்த்தேன்.

அடுத்த ஒரு மாதத்தில் அதே வியாதி என்னைத் தொற்றவே, மருத்துவரை அணுகினேன்.

ஸ்ட்ரெப்டோமைசின் மாத்திரைகள் உட்பட, ஒவ்வொரு முறையும், சிறியதும் பெரியதுமாக உள்ளங்கை குழி அளவுக்கான மாத்திரைகள் தினமும் உண்ணுவதற்கு பரிந்துரைத்தார்.

சில மாதங்களில் அவ்வளவு மாத்திரைகளை வாங்க, வழிப்படாததால் அவவ்வப்போது ஓரிரு நாட்கள் மாத்திரமே உண்ணாது தவறிய காரணத்தால் நோய் முற்றியது.

இதற்கிடையில், எனக்கு சமீப காலமாக, சென்னையை சேர்ந்த திருமணம் ஆகாது வீட்டிலிருந்தே மருத்துவ ஆலோசனை கூறி வந்திருந்தவரும் அடுத்தவங்களுக்காகவே வாழ்ந்து வந்த ஒரு மதிப்புக்குரிய சென்னை மருத்துவரான டாக்டர் கிளமெண்ட் ரெட்டி, மீண்டும் என்னை பரிசோதித்து, 'மேலே குறிபிட்ட மாத்திரை எனது உடம்புக்கு செயல்படாது என்றவர் 'ஸ்டெப்டோமைசின்' மாத்திரைகளை பரிந்துரைக்கு அதனைச் சாப்பிட ஆரம்பித்தேன்.

சில மாதங்கள் ஒழுங்காக சாப்பிட்டு வந்த நான், வழக்கம் போல ஒரு சில நாட்கள் மட்டுமே மேற்படி மாத்திரையை உபயோகிக்காத காரணத்தால் மீண்டும் நோய் முற்றியது. எங்களது அண்ணன் டாக்டர் லாரன்ஸ் இதனை கேள்விப்பட்டு, கேரளா ராமங்குளங்கர என்ற ஊரில், தான் வைத்திருந்த மருத்துவமனைக்கு என்னை வரவழைத்தார். எல்லா சோதனைகளும் வேற ஒரு ஆஸ்பத்திரியைச் சேர்ந்த ஷயரோக மருத்துவ நிபுணரால் பரிசோதிக்கப்பட்டு 'ஈத்தாம்பியூட்டால்' மாத்திரைகள் அடுத்த கட்டமாக பரிந்துரைக்கப்பட்டது.

சில மாதங்கள் கழிந்து, திடீரென்று கண் பார்வை சிறிது மங்கவே, மீண்டும் டாக்டர் கிளமெண்ட் ரெட்டியிடம் ஓட, அவர் என்னை சோதித்து அவரைக் கேட்காமல் மேற்படி மாத்திரையை அளவுக்கதிகமாக உபயோகித்த தவறுக்காக என்னைக் கடிந்து கொண்டு, என்னைக் காப்பாற்ற ஒரே வழி 'ரிஃபேம்...' என்று ஆரம்பிக்கும் மாத்திரைகள் தான் இனி உங்கள் உயிரைக் காப்பாற்ற முடியும். இது ஒன்றுதான் கடைசி முயற்சி என்றார்.

ஆனால், இதனைச் சாப்பிட்டால், உடம்பைக் கவனிக்க ஆகும் உணவுச் செலவு மற்றும் பிற வழிமுறைகளை கேட்டதும் எனக்கு தலை சுற்றியது.

மேலும் 20 க்கும் மேல் எடுக்கப்பட்ட எனது 'x ray'க்கள் மற்றும் 'ஸ்டெப்டோமைசின்', 'ஈத்தாம்பியூட்டால்' மாத்திரைகளை அளவுக்கதிகமாக சாப்பிட்டு வந்ததால் உடம்புக்கு ஏற்பட்ட பாதிப்பு நிலை, இப்போது 3வது நகர்வு மாத்திரையான 'ரிஃபேம்...' மாத்திரைகள் சாப்பிடபோவதால், உயிர் காப்பாற்றப் பட்டாலும், இரத்த மண்டலம், சுயநினைவு இழப்பு, நரம்பு மண்டல பாதிப்பு ஆகியவை ஏற்படும்.

சராசரி மனிதனாக வாழ முடியாது என்று கூறிவிட்டு, வெவ்வேறு பரிசோதனைகளை, பரிசோதனைக் கூடத்திற்குச் சென்று எடுக்கச் சொன்னார்.

திருமணம் செய்யாது, சமூக வாழ்வுக்கு அற்பணித்த அவரே சில 'குப்பி'களைக் கொடுத்து அதில் சளி போன்ற மாதிரிகளை சேகரித்து வெளியிடத்திலுள்ள குறிபிட்ட பரிசோதனை கூடத்தில் 'Test' எடுத்து விட்டு வருமாறு கூறினார்.

அவர் கூறியபடியே மேற்படி குப்பிகளை கையில் சுமந்து அவரது பெரிய வீட்டின் சுற்றுச்சுவரைத் தாண்டி 10 அடி தூரம் சென்ற எனக்கு கண்களில் நீர் முட்டியது!

என்ன செய்வது என்று, யோசித்தேன். ஐ.சி.டி.எஸ் தொண்டு நிறுவனம், அரசில் பதிவு பெற்றிருந்தாலும் எந்த நிதியும் வராத நிலை மாத்திரைச் செலவு, கூடுதலான சத்துமிகுந்த உணவு வகைகளில் தேவை... தலை சுற்றியது!

தெருவில் நடந்த நிலையில், மீண்டும் திரும்பிச் சென்ற நான் டாக்டர் இல்லத்தின் சுற்றுச் சுவர் ஓரமாக இருந்த கழிவு நீர் ஓடையில், அந்த குப்பிகளை வீசிய நிலையில், என் கண்கள் தாமாகவே வானத்தை நோக்கிப் பார்த்தன!

'இயேசுவே, நீர் உண்மையான

கடவுள்தானே! உமக்காக நான் இதுவரை தவறாத வாழ்வு வாழ்ந்த எனக்கு இதுவா கதி. நீர் எனது வாழ்வுக்கு அங்கீகாரம் செய்வதாக இருந்தால், எனது வியாதியை சுகமாக்கும். இல்லையென்றால் செத்துப் போகிறேன்! என்று சிறிய, வைராக்கித்துடனான ஜெபம் செய்து விட்டு கேளம்பாக்கம் அடைந்தேன்.

எந்த மருந்தும் சாப்பிடவில்லை. எந்த மருத்துவரையும் நாடுவதாக இல்லை.

இரண்டு மூன்று நாள் கழிந்த பின்தான், எனது உடம்பில் ஏற்பட்ட மாற்றத்தை உணர்ந்தேன்.

இருமல் இல்லை; சளி இல்லை, நடு வயிற்றில் ஏற்படும் நெஞ்சுவலி இல்லை, குறிப்பாக இரத்த வாந்தியுமில்லை.

மூச்சை நன்றாக இழுத்து விட்டுப் பார்த்தேன். ஒரு வலியுமில்லை.சிரமமுமில்லை.

இயேசுவே மெய்யான தேவன் என்பதை உணர்ந்தேன்.

3.ஐ.சி.டி.எஸ் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டு சிறிய அளவுக்கு, எல்லா கிராமங்களிலும் காலுன்ற நேரத்தில், எங்கிருந்தோ நூற்றுக்கனக்கான எதிரிகள் எழும்பினார்கள். உள்ளூரில் பெரும்பான்மையாக இருந்த இந்த மனிதர்கள் தனது ஜாதி பலத்தால் பெரும் எண்ணிக்கையில் என்முன் திரண்டார்கள்.

ஒருமுறை நூற்றுக்கும் மேற்பட்டோர், மாதா கோயில் வாசலில் மடக்கி பஞ்சாயத்தும் செய்தார்கள். தன்னந்தனியாக அகப்பட்ட நான் தப்பித்தது அதிசயம்.

அதன்பின் என்னிடம் பணியிலிருந்த சுமார் 80க்கு மேற்பட்ட எனது பணியாளர்களை தூண்டி விட்டு, எல்லாருமாக எனது அலுவலக கூட்ட அரங்கில் என்னை எதிர்த்தார்கள்.

நிலைமையைப் புரிந்து கொண்ட எனக்கு, கண்ணில் தெரிந்தது தையூர் கோமாநகரைச் சேர்ந்த பணியாளர் சாமுவேல் கையிலிருந்த பைபிள்!

அப்போது தான், எனக்கு ஞாபகம் வந்தது. வேறு காரியத்துக்காக ஜெபம் செய்ய 'Jesus calls' நிறுவனத்துக்கு சில மாதங்கள் முன்புதான் ஜெபம் வேண்டிய விண்ணப்பக் கடிதம் எழுதியிருந்தது.

அந்த கடிதத்திற்கு பதில் கடிதமாக சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன் அவராகவே கையெழுத்திட்டு அனுப்பிய பதில் கடிதம் ஞாபகத்துக்கு வந்தது.

கூட்டத்தை அமர்த்திவிட்டு, விடு விடுவென வீடு சென்று கடிதத்தைத் தேடி எடுத்து வந்த நான் கூட்டத்தினருக்குக் கடிதத்தை எடுத்துக் காண்பித்தேன்.

"சிறுமைப்பட்டவர் மேல் சிந்தையிள்ளவன் பாக்கியவான்" தீங்கு நாளில் அவனை விடுவிப்பார் கர்த்தர் அவனை பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார். பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான். அவர் சத்துருக்களின் இஸ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர்" என்பதாக முடிந்தது, சகோதரர் டி.ஜி.எஸ் எனக்குத் தெரிவித்திருந்த தீர்க்கதரிசன வசனம்!

அவருக்கு முன்னர் நானெழுதிய கடிதத்தில் ஒரு வார்த்தை கூட எதிரிகளது நடவடிக்கை பற்றி தெரிவித்திருக்கவில்லை என்பது வேறு விஷயம்!

கூட்டத்தினரிடம் நான் கூறினேன் "நான் உண்மையானவன் என்று நீங்கள் நம்பினால், இந்த வாசிக்கப்பட்ட வசனம் உண்மையானது என்றால் மட்டும், நாளை, இங்கு வாருங்கள். நீங்கள், ஒரு சேர வந்தால் மட்டுமே ஐ.சி.டி.எஸ் அரங்க வாசல் திறக்கும். ஒருவர் வரவில்லை என்றாலும் கூட, அலுவலகத்தை நிரந்தரமாக மூடிவிட்டு என் ஊர் பக்கம் போய் விடுவேன்" என்றேன்.

மறுநாள்! என்னை கேள்வி கேட்ட முக்கியஸ்தர்கள் உட்பட, அனைவரும் வந்து சேரவே அலுவலகம் திறந்தது; நிறுவன வேலைகள் களை கட்டியது! இது சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன் எனக்காக ஜெபம் செய்து அனுப்பியிருந்த அந்த பைபிள் வசனத்தின் வலிமை என்பதை உணர்ந்தேன்.

4. அதன் பின்னரும், வெளி எதிரிகள் அடங்கிய பாடில்லை! அவர்களது ஜாதியைக் குறித்து நான் சொல்லாத வார்த்தைகளை சொன்னதாக, சாலை மறியல் செய்து கேளம்பாக்கத்தை ஸ்தம்பிக்க வைத்தார்கள் எல்லா அம்பேத்கர் சங்கங்களையும் திரட்டிய

இந்த பழைய எதிரிகள்.

எனது அலுவலகத்துக்கு எதிரிலே அவர்கள் அமைந்திருந்த அம்பேத்பர் குடிசையை அவர்களே இரவில் தீ வைத்து விட்டு பழியை என்மேல் போட்டார்கள்.

மறுநாள் விடிந்த பின்னர் அதனைக் கேள்விப்பட்டு, ஒரு அதிகாரியைத் தொடர்பு கொண்டேன். அவர் தலைமறைவாக இருக்க சென்னை வரச் சொன்னார்.

அவரது ஆலோசனையின் பேரில் நடந்து கொண்டேன்.

இதற்கிடையில் மூன்று விதமான, ஜாதிக்கு எதிரான 'உடனடி கைது' பிரிவில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, போலீஸ் என்னைத் தேடியது. தேடப்படும் குற்றவாளியாக என்னை அறிவித்தது.

70 நாட்கள் திருச்சியில் தங்கியிருந்து தினமும் அங்குள்ள காவல் நிலையத்தில் கையெழுத்திட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது!

தினமும் காலை அங்குள்ள மாதா கோவிலுக்குச் சென்று, திருப்பலியில் கலந்து கொள்வதை வாடிக்கையாக வைத்திருந்தேன்.

இதற்கிடையில், கேளம்பாக்கத்தைச் சுற்றியுள்ள, சுமார் 40 கிராமங்களிலுள்ள மக்களது சாட்சியத்தின் அடிப்படையில் கோர்ட் என்னை விடுவித்தது.

விடுவித்த மறுநாள் எனக்கு ஜெர்மணியின் நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட 'அர்மதா' வெள்ளை நிற ஜீப்பை சென்னையில் 'டெலிவரி' எடுத்துக் கொண்டு, எனது பனியாளர்கள் சிலருடன் காரில் பயணித்து எனது அலுவலக சாலையில் நுழைந்தேன்.

அதே சாலையில், அதே எதிரிகள் வேறொரு இடத்தில் புதிய அலுவலகத்துக் கொட்டைகையைக் கட்டிக் கொண்டிருந்தவர்கள் பார்க்கும் வகையில், சரியான சமயத்தை ஏற்படுத்தித் தந்தார் இறைவன்! அவரை மனதார வணங்கினேன்!!

5. அதன்பின்னர் வடவை மாதா குரலோலி ஆரம்பிக்கும் எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

ஆரம்பத்தில். வடக்கன்குளம் பங்குமக்கள் ஒத்துழைப்பு தந்தார்கள். அதனால் பங்கு சாமியாரும் வரவேற்றார்.

அதன்பின் மூன்று வருடங்களில் சாமியார், எந்த ஒரு ஆதரவு தராத நிலையில், நான் மட்டும் தனியாக இருந்து திரு. ஜேம்ஸ் மார்ட்டின் போன்றோரது ஆதரவு வார்த்தைகளால் பலம் பெற்று புத்தகத்தை வெளியிட்டு, வடவை மக்களுக்கு விநியோகித்தேன்.

ஆனால், கோயில் ஸ்டாலில் புத்தகம் வைக்க திரு. இக்னேஷியல் கனகராஜன் போன்ற ஊர் பிரமுகர்கள் பக்க பலமாக இருந்ததால் அந்த முயற்சி சில காலம் ஓடியது!

அடுத்த மூன்று வருடத்தில், இலவசமாக புத்தகத்தை ஊரில் விநியோகம் செய்யக்கூட ஆளில்லை!

சென்னையிலும் நான் தனியாக அச்சிட்டு. வடக்கன்குளம் சென்று தனியாளகவே விநியோகம் செய்தேன்.

அந்த வருடங்களில் யாராவது ஒருவரை தேவன் எனக்கு காண்பித்தார்.

ஊர் மக்கள் யாரும் எதிர்க்கவில்லை. அவர்களை குறை சொல்லி பயனுமில்லை! புத்தகத்தை ரசித்தார்கள்! அதுமட்டுமே நடந்தது.

ஆனால், ஒரு வீடு தவறாது, இந்து மக்கள் உட்பட எல்லோரும் கேட்டு வாங்கியதுதான் மாதாவின் புதுமை!

அப்போதுதான் மூன்று பேர் புதிதாக புத்தக தயாரிப்பு, அச்சிடுதல், விநியோகித்தல் ஆகியவற்றுக்கான ஒத்துழைப்பை எனக்கு தந்தார்கள்!

இந்த வருட 27வது வெளியீடு வரை கடந்த சுமார் 12 வருடங்களாக இந்த மூவர் இல்லை என்றால், இந்தப் புத்தகம் வெளியிடுவதற்கு மிகுந்த சிரமப்பட்டிருப்பேன்.

ஒவ்வொரு புத்தகம் வெளியிடப்படும் வரை ஏற்படும் பல்வேறு சிரமங்களைத் தாண்டிதான் இந்த வடவைமாதா குரலொலி இத்தனை வருடங்களாக வெளிவந்து கொண்டிருக்கிறது!

●

# கேட்டதும் கிடைக்குமா?

கண்டிப்பாக கிடைக்கும்!

ஆனால், அதற்கு ஒரு விலை கொடுக்க வேண்டும்.!

என்ன விலை?

நம்பிக்கை, அதுவும் அசாத்திய நம்பிக்கை!

கிறிஸ்தவன் தான் நான்... ஆனால் கிடைக்க வில்லை என்கிறீர்களா!

எப்படி கேட்கிறோம் என்பதுதான் பிரச்சினையே...!

கண்டிப்பாக நடக்கும் என்ற ஆழ்ந்த விசுவாசம் இல்லாமல் சும்மா நாமும் கேட்டு வைப்போமே என்ற உள்ளுணர்வு அவனுக்கு தோன்றிவிட்டால் அந்தக் காரியம் எப்படி நடக்கும் ?

அட போங்கப்பா... நாமெல்லாம் மனிதர்கள்...! சூழ்நிலைக்குத் தகுந்தபடிதானே நாமும் கேட்க முடியும். இந்த கொடுமையான உலகத்திலே அப்படி குருட்டுத் தனமாக நம்ப முடியுமா? அப்படியே நம்பினாலும் ஏதோ ஒன்று நம்பிக்கையில்லாமல் செய்து விடுகிறது என்றால் அதுவும் சரிதான்.!

ஆனால் மனிதனின் பலவீனம் உறுதியற்ற தன்மை அவருக்கு (இறைவனுக்கு) தெரியும்.!

அதற்கு அவன் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான்.!

நம்பிக்கை குறைந்ததையே இறைவனிடம் கூறி மன்னிப்பு கேட்டு விட்டால், உடன்தானே நம்பிக்கை கொப்பளிக்கும்!!

ஆஹா, இப்போது உடனே கிடைத்து விடுமா?

அப்படியாக மந்திரத்தில் மாங்காய் காய்த்து விடும்தானே என்றால் அதுவுமில்லை.!

நம்பிக்கை வைப்பதோடு பொறுமையோடு காத்திருக்க வேண்டும்.!

இந்த உண்மையை மட்டும் உணர்வுப்பூர்வமாக உணர்ந்து விட்டால் அவன் காட்டில்தான் மழை! இதன் கால அளவு, நமது நம்பிக்கையின் அளவு, அந்த வேண்டுதலில் தன்மையைப் பொறுத்தேயாகும். ஒரே நொடியில் கூட நடக்கும். முக்கியமான ஒன்று! நமது நடத்தை சுத்தமாக, நேர்மையாக இருந்தால், மனது தெளிவாக இருக்கும்! இந்த தெளிவுள்ள மனிதர்கள் கேட்டால், அதன் பலனே தனி!

உரிய நேரத்தில் கண்டிப்பாக கிடைக்கும். கேட்டது கிடைக்கும் வரை தாங்குகின்ற சக்தி தாராளமாய் கிடைக்கும்.

கேட்டதை விட அதிமாவே கிடைக்கும்.! ●

## ஓயாத சர்ச்சை

ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள் இந்த டூரின் நகர துணியை ஆராய்ந்தார்கள்.

ஆடை நெய்தமுறை, ஆடையில் ஒட்டிக்கொண்ட மகரந்தம், ஆணி அடித்ததாக துணியில் பதிந்த தடம், எக்ஸ்ரே பகுப்பாய்வு துணியில் ஒட்டிக்கொண்டிருந்த மணல் துணியிலுள்ள பெயர் ஆகியவை உட்பட நூற்றுக்கணக்கான சோதனைகள் மூலம் இந்த துணியே உண்மையா அல்லது யாரும் உருவாக்கினார்களா என்ற ஆராய்ச்சிகள் சமீபம் வரை முடிக்கிவிடப்பட்டு இறுதியில் அதாவது இந்த வருடத்தின்- 2020 ஏப்ரலில் வெளியான தகவல், இந்த துணி இயேசுவின் உடையது என்பதுதான்.

விரிவாகப் பாருங்கள் - 39ஆம் பக்கம்